திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்: என்.வி.நடராசன்

நாடு செழித்திட... வாழ்வு வளம் பெற...

அறிஞர் அண்ணா

26—12—61 அன்று சென்னை பெத்துநாயகன் பேட்டை தி. மு. க. சார்பாக நடைபெற்ற மாபெருங் கூட்டத்தில், நமது ஆசிரியர் என். வி. நடராசன் அவர்களை பேசின் பிரிட்ஜ் தொகுதி தி. மு. க. வேட்பாளராக அறிவித்து அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரை முழுதும் இங்கே அப்படியே தரப்படுகிறது.

அன்புள்ள தலைவர் அவர்களே, அருமைத்தோழர்களே, எனக்குஎப்பொழுதும் இந்த வட்டாரத்தில் வந்து பேசுவதில் ஒரு தனி மகிழ்ச்சி உண்டு என்பதையும் ஒரு தனியான உரிமை உண்டு என்பதையும் எல்லாக் கட்சியிலே உள்ளவர்களும் மிக மிக நன்ருக அறிந்திருக்கிருர்கள்.

அதிலும் என்னுடைய நண்பர் என். வி. நடராசன் அவர்களுக்கு —முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தேர்தலில் ஈடுபட்டிருக்கின்ற என். வி, நடராசன் அவர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்ள வந்திருப்பதில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

அந்த வகையிலே மிக்க மகிழ்ச்சிகரமான முறையில்—ஆர்வத்தோடு முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காக நல்ல அரும்பாடுபடக்கூடிய நண்பர்கள்—பயிற்சி பெற்ற தோழர்கள்—பக்குவப்பட்ட நண்பர்கள், இந்த வட்டாரத்திலே, சென்ற தேர்தலைவிட இந்த முறை மிக அதிகமான அளவுக்கு வளர்ந்திருக்கிருர்கள், ஆகையினுல் இந்த முறை நம்முடைய நண்பர் என்.வி. நடராசன் அவர்களுக்கு நல்ல வெற்றியைத் தேடிக்கொடுப்பீர்கள் என்பதில் நான் மிகுந்த உறுதியாக இருக்கிறேன்.

நண்பர். நடராசன் அவர்கள் கடந்த 35 ஆண்டுகளாகப் பொது வாழ்க்கைத் துறையில் ஒரே முனையில் — எப்படிப்பட்ட அரசியல் சபலங்களுக்கும் இடங்கொடுக்காமல் கொள்கையின் வழியிலேயே நின்று பணியாற்றியவர்கள் இதே பெத்துநாய்க்கன் பேட்டையிலே அவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தபொழுது நான் ஜஸ்டீஸ் கட்சியில் இருந்தவன். என்னைப்பார்த்தவுடனே அவருக்கு அமோகமான கோபம்வரும். அவரைப்பார்த்த உடனே எனக்கு அடக்கமுடியாத பரிதாபம்வரும். ஏனென்ருல் அவருக்கு காங்கிரசை நான் எதிர்க்கிறேன் என்பதிலே கோபம். எனக்கு இப்பப்பட்டவர் காங்கிரசில் நெடுநாட்கள் இருக்க முடியாதே என்பதினுல் அவரிடத்திலே பரிதாபம். அந்த வகையில் தமிழகத்தில் முதன்முதல் இந்தியைப் புகுத்திய நேரத்தில் இந்தியை நாங்கள் எதிர்த்த நேரத்தில் நண்பர் நடராசன் அவர்கள் காங்கிரசில் இருந்துகொண்டே இந்தியை எதிர்த்தார்கள். அப்பொழுது ஒருநாள் 'இந்த சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நான் இந்த இந்தியை கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டு போகப் போகிறேன்' என்று நடராசன் என்னிடத்தில் சொன்ஞர். நானும் 'செய்யுங்கள், செய்யுங்கள்' என்று அவருக்கு ஓரளவுக்குத் தூண்டுகோலாக இருந்தேன். அவர் காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்துக்குச் சென்ருர், இந்தியை எதிர்த்துத் தீர்மானத்தைக் கொடுக்க. நான் குறிப்பிடுவது சில புதிய காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது. நான் சொல்வது காங்கிரஸ் விஷயம்—எலெக்ஷன் விஷயம் அல்ல! ஆகையினுல் புதிய காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது. நான் சொல்லுவது சத்தியமூர்த்தி ஐயருடைய காலம்.



இவர் அந்த தீர்மானத்தை கொடுப்பதாக என்னிடத்தில் சொல்லிவிட்டுப் போனதும் நான், 'என். வி. நடராசன் காங்கிரசை விட்டு விலகிவிட்டார். இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் வந்து பேசப்போகிருர். அனைவரும் வாருங்கள்' என்று எழுதி, ஒரு ஆயிரம் காப்பிகள் அச்சடித்து, அதைக் கையிலே வைத்துக் கொண்டேன். இவருக்கு அது தெரியாது.

இவர் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காரசாரமாக இந்தியை எதிர்த்து வாதாடுகிருர். இங்கே அச்சகத்திலே இவர் காங்கிரசை விட்டு விலகிவிட்டார் என்று நான் வெளியிடுகின்ற நோட்டீஸ் அச்சாகிக் கொண்டிருக்கிறது. சத்தியமூர்த்திக்கும் இவருக்கும் கடுமையான வாதங்கள். மறைந்து போன கோபாலரத்தினம், இன்னமும் காங்கிரசிலே இருந்துகொண்டே இளைத்துக் களைத்து இடந்தேடி அலுத்துக் கொண்டிருக்கும் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் செங்கல்வராயன் இவர்கள் அத்தனைப்பேரும், அந்த இடத்திலே நடராசனுக்குச் சமாதானம் சொன்ஞர்கள். உங்களைக் கார்ப்பரேஷன் கவுன்சிலர் ஆக்குகிருேம் — மேயர் ஆக்குகிருேம். எம், எல். ஏ.வுக்குக் கூட நிற்க வைக்கிருேம்—இந்த அண்ணாத்துரைகூட சேர்ந்துகொண்டு இந்தியை எதிர்க்கிற தீர்மானத்தைக் கொடுக்காதே இதை 'வாபஸ்' வாங்கிக்கொள் என்ருர்கள்.

இவருக்குக் காலையிலே என்னிடத்திலே பேசிய சுவனம். மறுபடியும் போய் அவனுடைய முகத்திலே விழிக்கவேண்டுமே, திருப்பித் திருப்பிக் கேட்பானே என்ற எண்ணத்தில், 'இதை நீங்கள் ஒற்றுக்கொள்ளாவிட்டால், தோற்கடித்தால் நான் காங்கிரசை விட்டு விலகுவேன் என்று சொல்லிவிட்டார், அந்தத் தீர்மானம் அவர் எண்ணியபடி ஆகவில்லை. நம்முடைய நண்பர் கணேசன் அவர்கள் இந்த வட்டத்தைச் சேர்ந்தவர்கள்—நம்முடைய டழம் பெரும் நண்பர். அவரிடத்திலே நான் இந்தத் தயாரான நோட்டீசைக் கொடுத்து, 'காங்கிரஸ் கமிட்டி

(5-ம் பக்கம் பார்க்க)

ஓலை 15 31-12-61 சனிக்கிழமை விலை 16 காசு. மலர் 20

மைத்துனிக்கு...!

அன்புள்ள முல்லை

நலம். உன்னுடைய நலம் அறிய ஆவல். நான் அலுவலகம் சென்று எப்படியோ ஓர் ஆண்டு நகர்ந்து விட்டது. இந்த ஓர்ஆண்டில் பட்ட இன்னல்களும், சங்கடங்களும் என் எழுத்துத்துறையை பாதிக்காமல் இருக்க முடியுமா? இப்படி என் இலட்சியத்தைப் பாழ்படுத்துகின்றதே இந்த அலுவலக வேலை என்று மனக்கசப்பு அடைவேன்; கவலையும் கொள்வேன். அந்த நேரத்தில்தான் வேலையில்லாதவர்கள் படும் அவதிகளும் என் கண் முன்னர் வந்து தோன்றும்.

வேலை கிடைத்தும் காலத்தை மிச்சம் படுத்துவதற்காகக் கவலைப்படுவோர் எங்கோ ஒரு சிலர்தான். தாம் கொண்ட இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகப் பொருள் ஈட்டும் வாழ்வினை வெறுத்து எளிமையோடு வாழ்பவர் எங்கோ ஒரு சிலர்தான், அந்த ஒரு சிலரில் நான் ஒருவனாக இருந்ததால் வேலையைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் என் உள்ளம் இடிந்தது; அலை மோதியது; துன்பப் புயலில் சிக்கித் தவித்தது. எனினும் அலுவலகத் தொடர்பினால் நான் பல அரிய செய்திகளையும், உண்மைகளையும் உணர முடிந்தது.

அலுவலகத்தை ஒரு சமுதாயத்திற்கு ஒப்பிடலாம். தாழ்ந்த நிலையினில் இருக்கும் பணியாளர், உயர்ந்த நிலையில் இருக்கும் அதிகாரிகள் பொதுவுடமை அமையாத சமுதாயத்தையே காட்டினார்கள். வீட்டில் உணவுக்குப் போராடும் நிலைமையையே, அலுவலகத்தில் காப்பிக்காகப் போராடும் நிலைமையாகக் காண்கின்றேன், ஏவலாட்கள் பணக்காரர் மாளிகையிலும் உண்டு; அதிகாரிகளின் அறைகளிலும் உண்டு. அதுமட்டுமல்ல ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசல்—பழி கூறல் — வஞ்சகச் செயல்கள் உருக்கொள்ளல் ஆகிய இவைகட்கு வழிவகுத்துக் காட்டுவது அலுவலகமே. படித்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு சமுதாயம் அமைத்ததுபோல் காட்சி அளிப்பதே அலுவலகச் சமுதாயம். அந்தச் சமூகத்தில் அன்பும் பண்பும், பாசமும் வளர்வதற்கு வேண்டிய சூழ்நிலை இல்லை; அப்படி வளர வாய்ப்பு ஏற்பட்டால் அது அலுவலகச் சமுதாயத்தின் குறை என்று திருத்தப்படுகிறது. சட்டங்கள் வந்து, அவைகளைத் திருத்திச் செல்கின்றது. இதனால் அலுவலகச் சட்டதிட்டங்களோ, ஒழுங்கு முறைகளோ தேவை இல்லை என்று கூறவில்லை. அதே நேரத்தில் அலுவலகத்தில் இருக்கும் அதட்டல் மிரட்டல், வசைமொழிகள் இருக்க வேண்டும் என்றும் கூறமாட்டேன். இன்று இருக்கும் நிலைமைக்கு சீர்திருத்தம் காணவே என்னுள்ளம் ஆவல் உறுகின்றது.

அலுவலகத்தார் வேலை என்பது கூலிக்காகச் செய்கின்றோம் என்ற நிலை மாறி நாட்டு நலத்துக்காக இத்தொண்டினை மேற்கொண்டோம் என்று எண்ணும் நிலைமை வரும்வரையில் அரசாங்கத்து ஆட்சி முறையில் ஒழுங்கும் விரைவும் ஏற்பட முடியாது. மேலும் சில அலுவலகத்தில் இருப்பதுபோல் நேரத்தைக்கண்டு திறமையை மதிக்காமல், தனிச்சிறப்பையும் புதுவழி செல்லும் ஆற்றலையும் கண்டு அலுவலகத்தில் திறமையை மதிக்கவேண்டும். அந்த நிலை வரும் வரையில் அலுவலகத்து வேலைகள் நாட்டின் நலனுக்காகச் செய்யப்படுபவை என்ற மனப்பான்மை உண்டாக வழி இல்லை.

ஒரேவித யந்திரம் போல் அலுவலக மனிதர்கள் ஆக்கப்படுகின்றனர். அவர்கள் செய்யும் தொழிலும் ஒரேவிதமானவை. ஒருவர் செய்யும் தொழில் இன்னொருவரால் அதே அளவுக்குச் செய்து கொடுக்கப்படுகிறது. எனவே கிளார்க்குகளின் தனித் திறமையைக் காண முடியாமல் போகின்றது. அவர்கள் செய்யும் பணியில் தனி ஊக்கத்தையும் அவர்கள் செலுத்த முடியாமற் போய்விடுகின்றனர். அலுவலகத்தார் கவலைகள், ஊக்கமில்லாமலும், திறமை செலுத்த முடியாமலும் செய்யும் ஒரே அமைப்புள்ள வேலைகளாய் இருப்பதால் அந்த வேலைகளில் அவர்களின் உள்ளம் இணைய முடியவில்லை. உள்ளம் இணையாமல் அவர்கள் நாடோறும் காலந்தள்ள முயல்வதால், தாம் செய்யும் தொழில் வயிற்றுப் பிழைப்புக்குத்தான் என்ற நினைப்பு கொள்கின்றனர்.

மனிதன் முன்னேறும் பயன்கலையிலும், கவின்கலையிலும் அவனை இழுத்துச்செல்லும், அவன் உள்ளத்தை இணையச் செலுத்தும் ஆற்றல் இருப்பதைக் கண்கூடாக காணலாம். கைத்தொழில் பொருள்களை ஆக்கும் எந்திரத்தொழிலில் இருக்கும் உற்சாகம் கிளார்க்குகளின் வேலையில் இருப்பது அரிது. நாட்டின் கணக்குகளைத் தயாரிக்க வேண்டும் என்று முனைபவன் கணக்குகள் அவசியம் என்று உணர்ந்தாலும் கணக்கு முழுவதையும்தானே ஏற்று நடத்தும்படியாக இருந்தாலும் அவனுக்கு ஓரளவு உற்சாகம் எழும். ஆனால் கணக்கு என்ற பாகத்தில் ஏதோ ஒரு சிறு பகுதியே அவனுக்குச் செய்யக் கொடுக்கப்படுகிறது. இதனால் அவனும் அவன் முனைந்த தொழிலும் வேறுபட்டு நிற்பதைக் காணலாம்.

கலைஞனோ, குயவனோ, தச்சனோ ஒரு கடிகாரம் போன்றவர்கள். அவர்கள் தாம் செய்யும் காரியத்தில் ஒரு பயனை வெளிப்படுத்த முடியும் என்று செய்து காட்டுபவர்கள். ஆனால் ஒரு கிளார்க்கோ, ஒரு பியூனோ, ஒரு காவல்காரனோ தான் ஒரு காரியம் உருவாகச் செய்தேன் என்று எண்ண முடியாது. அவன் கடிகாரத்திலுள்ள சில சக்கரங்கள் போல், ஸ்பிரிங்குகள் போல் இருக்கிறான். அந்தச் சக்கரம் தனியாக நின்று ஒரு காரியத்தையும், ஒரு தனிப்பட்ட பணியையும் செய்ய முடியாது. அது மற்றச் சக்கரங்களோடும், ஸ்பிரிங்குகளோடும் இணைந்திருக்கும் போதுதான் அதன் பயன் வெளிப்படுகிறது.

இவ்வாறு அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தொழில் இயக்கத்தில் ஒரு கூறாக நின்று பணியாற்றுவதனால்தான் அவர்கள் இன்னொன்றுக்கு அடிமை என்ற உணர்ச்சியை அடைகின்றார்கள். இன்னொருவருக்குக் கடமைப்பட்டுக் கைகட்டி வேலை செய்யவேண்டி நேர்கிறதே என்று நெஞ்சத்தில்

தமிழோவியன் எம்.ஏ

அச்சம் உறுகின்றனர். இப்படி உரிமை இல்லாமல் ஊக்கம் இல்லாமல், நெஞ்சம் இல்லாமல் அடிமைப்பட்ட வேலை செய்பவரைக் காணும்போது, பொறுப்பில்லாதவர்கள், கடமை உணர்ச்சி இல்லாதவர்கள், ஊக்கம் இல்லாதவர்கள், நாட்டுப் பற்று இல்லாதவர்கள் என்று அவர்களைச் சொல்லால் தண்டிக்க முடியும். அப்படிப் பொறுப்பில்லாதவர்களை பணத்துக்காக வேலை செய்யும் கூலிகளை, ஆதரிக்கவும்வேண்டியதாகின்றது. ஒரு பக்கம் ஆதரவும், இன்னொரு பக்கம் கண்டிப்பும், மறு பக்கம் அடிமையும் கொண்டு ஒரு தனிப்பட்ட சமூகம் சாதாரண சமூகமாக இல்லாமல் பெரும்பாலோரின் சமூகமாக மாறிவிட்ட காலம். இந்தச் சமூகம் எழுத்தாளர், உழவர், கைத்தொழிலாளர் போல் உரிமை கொண்டு வாழும் சமூகமாக இல்லாமல் சிலபல மறைமுக, நேர்முகச் சட்டங்களுக்கு அடிமைப்பட்டு, முன்னேற்றம் என்னும் ஆசையால் மனிதனின் சில இன்றியமையாத பண்பான உணர்ச்சிகளுக்குச் சிதைவு செய்துவரும் முறையில் ஒருவித குறை இருக்கத்தான் செய்கிறது.

கிளார்க்குகள் சமுதாயம் மற்றச் சமுதாயத்தினரின் வாழ்வின் உயர்வுக்கு வகை செய்யலாம். ஆனால் அவர்கள் நிலை தாழ்ந்துபோவது தானே? இந்த நிலை மாறவேண்டுமானால் சில பல மாற்றங்கள் அலுவலகங்களில் ஏற்பட்டே ஆக வேண்டும் முதலாவதாக தற்போதுள்ள ஏழு மணி. எட்டு மணி வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும். அலுவலக வேலையில் ஊக்கமில்லாதாருக்குக் குறைந்த நேர வேலையும், மிக்க ஊக்கமும் ஆர்வமும் ஆற்றலும் உடையவருக்கு மிகுந்த நேர வேலையும் கொடுத்துக் கிளார்க்குகளின் மனங்களில் உரிமையை வளர்க்கலாம். நேரத்திற்கேற்ற சம்பளம் தந்து அவர்களை ஊக்குவிக்கலாம்.

மிகுந்த நேரத்தில் குறைந்த வேலை செய்து நிறைந்த சம்பளம் பெற்றுவிடலாமே என்ற ஐயம் ஏற்படக்கூடும். அதனால் இரண்டாவதாக, அவர்கள் செய்யும் வேலையின் அளவை மட்டுமன்றி, அதனுடைய வளப்பத்தையும் கண்டு சம்பளத்தை அளவிடவேண்டும். மூன்றாவதாக, அவர்களின் உடல் உழைப்பைக் குறைப்பதற்கான வசதிகளைச் செய்தல். இத்தனையும் அலுவலகங்களில் ஏற்படவேண்டுமானால் உண்மையும், நேர்மையும் அதிகாரிகளிடம் இருக்கவேண்டும் அப்பொழுதுதான் ஒருபால் கோடாமல் அவர்கள் எல்லோரையும் கண்காணிக்க முடியும்,

ஏவலாட்கள் நிலையைப்பற்றி என் உள்ளம் பல கோணங்களிலிருந்து போராடுகின்றது உயர்ந்த வேலை, தாழ்ந்த வேலை — உடல் உழைப்பு மூளை உழைப்பு—உடல் உறுதி கொண்டோர் மூளை உறுதி கொள்ளாமை என்பனபற்றியெல்லாம் என் சிந்தனை செல்லுகிறது. உயர்வு தாழ்வு இருக்கலாம்; இல்லாமல் போகவும் முடியாது. ஆனால் உண்ணுவதிலும், உடுப்பதிலும், உறைவதிலும், இன்பம் நுகர்வதிலும் உயர்வு தாழ்வு ஏன் இருக்கவேண்டும்? வேண்டுமானால் மதிப்பு, திறமை, புகழ் ஆகிய இவற்றில் உயர்வு தாழ்வு இருந்து போகட்டுமே? அந்தச் சம நிலை வரும் வரைக்கும் உடல் உழைப்பால் வாழ்வோர் உயர்வதற்கு வழி இல்லை. எந்திரங்கள் வந்து ஓரளவுக்கு அவர்களை உயர்த்தலாம் அதனால் முற்றிலுமே அவர்கள் உயர்ந்து விடுவார் என்று எண்ணுவதற்கில்லை.

மற்றொன்று இந்த நேரத்தில் என் உள்ளத்திலிருந்து கிளம்புகிறது. ஒரு சிலர் திடீரெனச் செல்வந்தர்களாக மாறிவிட சமூகத்தில் வாய்ப்புக்கள் பெருகியிருப்பது போல் திடீரென சிலர் உயர்ந்த பதவிக்கு வந்துவிட வாய்ப்புக்கள் இருப்பதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. இந்த நிலையில் I. A. S. ஆபீசர்களையும், S. S. L. C. கிளார்க்குகளையும் எண்ணும்போது ஒருவர் உயர இன்னொருவர் தாழ்ந்தே இருக்க கல்வி ஆட்சி இடம் கொடுக்கலாமா? என்றுதான் மனம் கேட்கிறது.

இவ்வாறு பல குறைகளின் பட்டியல் நெஞ்சில் நீண்டுகொண்டே போகிறது. ஒரு நாள் அவைகளையெல்லாம் குறித்து உனக்கு அனுப்ப எண்ணியிருக்கின்றேன். குறைகள் பலரிடை பரவினால் தானே அதற்குத் தீர்வுகள் விரைவில் கிடைக்கும்.

குறைகள் மலிந்த அலுவலகத்திற்கு நீ போகமாட்டாய் என்று எண்ணுகின்றேன். எப்படியாகிலும் என்ன? இன்னும் இரண்டு ஆண்டு தான் இருக்கின்றன. விரைவில் படித்துப் பட்டத்தை வாங்கிவிடு. அது வாழ்க்கைத் திருப்பத்திற்குக் கைகாட்டும் ஒரு வழி காட்டும் மரமாக இருக்கட்டும். ஆனால் அதனை ஒரு மதிப்பு என்று கருத மாட்டேன். படித்தவர்களில்பெரும்பாலோர் தாம் பட்டம் வாங்கியும் அறிவற்றவர்கள், பண்பற்றவர்கள் என்று காட்டிவிடுகின்றனர். எனவே, பட்டம் ஒரு திருப்பு மையம், அதனால் நம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொள்ள வழியுண்டு. அவ்வளவுதான்.

கல்லூரிப் பெண்களின் தரங்கெட்ட செயல்களை எழுதியிருக்

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிடன்

எதையுந் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

சென்னை | 31—12—61 | சனிக்கிழமை

மறந்துவிடாதீர் !

தேர்தல் நெருங்கிவிட்டது. இடையில் இருப்பது ஐம்பது நாட்களுக்கும் குறைவாகவே இருக்கிறது! அயராது பணியாற்றிக்கொண்டிருக்கும் கழகத் தோழர்களின் கடமை பெருகியவண்ணமே உள்ளது. நமக்கிருக்கும் குறைவான வசதி வாய்ப்புக்களை வைத்துக்கொண்டு—இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் தன் கொடியைப் பறக்கவிட்டுள்ள காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ளோம் நாம் !

பண பலத்தையும், ஆள், அம்பு படை பலத்தையும், அதிகார பலத்தையும் துணைக்கழைத்துக்கொண்டு காங்கிரஸ் கட்சி தேர்தல் களத்திலே இறங்குகிறது !

மக்கள் மத்தியிலே மந்திரிகள் வருவார்கள் !

பலப்பல புதிய வாக்குறுதிகளைத் தருவார்கள் !

அதைச் செய்கிறோம்—இதைச் செய்கிறோம் என்று கூறி மக்களை மயக்க முற்படுவார்கள் !

இதையெல்லாம் கருதித்தான், நாட்டிலே உள்ள எல்லா எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் முன்னரே கூறினார்கள்—தேர்தல் வருவதற்கு ஆறு திங்களுக்கு முன்னராவது அமைச்சர்கள் தங்கள் பதவியைத் துறந்து தேர்தலில் ஈடுபடவேண்டும் என்று !

ஜனநாயகம் தழைத்தோங்குகின்ற நாடுகளில் இந்த முறை கடைப்பிடிக்கப்படுவதை இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். ஆனால் பதவி வெறியில் ஆட்பட்டிருக்கும் காங்கிரசுக் கட்சி இவைகளையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

தங்களிடம் இவ்வளவு குறைகளை வைத்திருக்கும் காங்கிரஸ் ஆட்சிபீடத்தினர் இவற்றையெல்லாம் மறைக்கும் விதத்திலே பொது மக்களின் முன்வந்து எதிர்க்கட்சிகளுக்கு இதோபதேசம் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள்.

—யாரையும் தாக்கிப் பேசவேண்டாம் !

—வீண் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவேண்டாம் !

—வகுப்பு பேதத்தை அடிப்படையாக வைத்துப் பேசவேண்டாம் !

—இதுபோன்ற "அறிவுரைகளை" அமைச்சர்கள் வாரி வழங்கிய வண்ணமேயுள்ளனர்.

மேடைகளில் தரக்குறைவான பேச்சுக்கள் பேசப்படுவதற்கு யார் காரணம் என்பதை பொதுமக்கள் மட்டுமல்ல காங்கிரஸ் பேச்சாளர்களும் நன்கறிவார்கள்!

வீண் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு, இலட்சக்கணக்கான பணங்களை விரயம் செய்வது யார் என்பதை நாட்டு மக்கள் மட்டுமல்ல காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களே நன்றாக அறிவார்கள்!

ஜாதி அடிப்படையில்—வகுப்பு அடிப்படையில் அரசியல் நடத்துவது யார் என்பதை நாட்டு மக்கள் இன்னும் நன்றாக உணர்ந்து கொண்டார்கள்—இவைகளுக்குப் பொறுப்பே காங்கிரஸ் கட்சிதான் என்பதையும் பொதுமக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஆனால் மந்திரிகளின் தேர்தல் காலப் பேச்சுக்களில் நாட்டு மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள் என்பது உறுதி.

ஆகவே நாட்டு மக்களின் பேராதரவை நமக்கு ஆதரவாகத் திரட்டவேண்டிய மகத்தான பொறுப்பு கழகத்தோழர்களைச் சார்ந்ததாகும்.

திராவிடத்தின் விடுதலைப் பெரும் பயணத்தில் கழகத்தின் தேர்தல் ஈடுபாடு ஒரு ஜனநாயகக் கடமையும்—விடுதலையை அடைய எண்ணி இருக்கிற வழிவகைகளிலே ஒன்றுமாகும்.

வருகின்ற தேர்தலில் காங்கிரசின்பாசிசவெறியைத் தட்டிக்கேட்கத் தவறிவிட்டால்—இந்த வாய்ப்பை நழுவவிட்டால்—உருவாகியிருக்கிற இந்த நல்ல சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால்—காங்கிரசின் காட்டாட்சி எத்தகைய கோர உருவெடுக்கும் என்பதை நாம் விளக்கத்தேவையில்லை.

இந்த மகத்தான பொறுப்பை மறந்து விடாமல் காங்கிரஸ் காட்டாட்சிக்கு முடிவுகட்டத்தயாராகும்படி வாக்காளர் பெருமக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

பொங்கல் மலர் வேலைகளை முன்னிட்டு திராவிடன் 6, 13ந் தேதிய இதழ்கள் நிறுத்தப்பட்டு, அடுத்த இதழ் பொங்கல் மலருக்குப்பிறகு ஜனவரி 20ந் தேதியன்று வெளிவரும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறோம். பொங்கல் மலர் திராவிடர் திருநாளன்று எல்லா ஊர்களிலும் கிடைக்கும். —நிர்வாகி.

விற்பனையாளர்களுக்கு

டிசம்பர் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகையையும், தேவையான மலர்களுக்குரிய முன்பணத்தையும் ஜனவரி 5-ந் தேதிக்குள் அனுப்பிவைக்கவேண்டும். அப்படி அனுப்பி வைக்கின்ற விற்பனையாளர்களுக்குத்தான் மலர் அனுப்ப வசதிப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். —நிர்வாகி.

6-ம் பக்கத் தொடர்ச்சி

முடைய பெரியப்பா இந்தியா பாங்கை ஆரம்பித்ததைப் போலவும் நம் சித்தப்பா ஸ்டேட் பாங்கை வைத்துக்கொண்டிருப்பதைப் போலவும் நம்முடைய மாமனுக்கு பாரத் பேங்க் இருப்பதைப் போலவும்—எந்த மயக்கத்தில் பேசுகிறார்கள்.

நமக்குத் திருப்பித் திருப்பித் தெரிந்த பேங்கு—இந்த அமாவாசையிலே சீட்டு பிடிக்கிறோமே இது தெரிந்து இருக்கிறது.

இருக்கிற பெரிய பாங்கியினாலே தொல்லை வரக்கூடாது என்பதற்காக நடுத்தர குடும்பங்களுக்காகவும், ஏழை எளியவர்களுக்காகவும் இந்த பாங்குகளை தேசியமயமாக்குங்கள் என்று சொன்னால் பரவாயில்லை அண்ணாதுரை சொல்வது நியாயந்தான் என்று எடுத்து சொல்லவேண்டுமா, ஆகாது அது ரொம்ப ஆபத்து என்றால்யாருக்கு?

தேர்தல் அறிக்கையைப் படித்துப் பாருங்கள். பணக்காரர்கள் படிக்கவேண்டாம் படித்தவுடனே கோபம் வரும்—ஏழை எளிய மக்கள் படித்துப் பாருங்கள். நடுத்தெரு குடும்பத்தார் படித்துப் பாருங்கள்—பாட்டாளித் தோழர்கள் படித்துப் பாருங்கள் — விவசாயிகள் படித்துப் பாருங்கள். விவசாயிகள் என்ற உடனே சும்மா ஆசை காட்டுகிறான் அண்ணாத்துரை ஆளுக்கு ஐந்து ஏக்கர் என்கிறான்—ஆளுக்கு மூன்றுஏக்கர்என்கிறான் எங்கே நிலம் என்கிறார்கள். அப்படியா அதில் எழுதிஇருக்கிறது.

எல்லோரும் வாருங்கள் ஆளுக்கு ஐந்து ஏக்கர் என்று சொல்லியிருக்கிறேன்.

கிடைக்கக்கூடிய — விளை நிலமாகக் கூடிய, புறம்போக்கு நிலத்தைக் கணக்கெடுத்து நன்செய் விளையக்கூடிய நிலமாக இருந்தால் மூன்று ஏக்கரும், புன்செய் பயிராகக் கூடிய நிலமாக இருந்தால் ஐந்து ஏக்கரும், நிலமில்லாத ஆதி திராவிட விவசாயிகளுக்கும், ஏழை மக்களுக்கும் கொடு

சுண்டல் கொடுக்கிறோம் வாருங்கள் என்றால் சட்டியில் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு எடுத்துக் கொடுப்பார்கள். நீ சுண்டல் கொடுக்கிறேன் என்றுசொன்னாயே சென்னையிலே இருபது லட்ச மாச்சே முடியுமா உன்னாலே என்று பேசுவதைபபோல் ஆளாளுக்கு 5 ஏக்கர் என்கிறாயே எங்கே இருக்கிறது என்று என்னையா கேட்பது நான் அப்படியா சொல்லியிருக்கிறேன்.

தேர்தல் அறிக்கையில் இருக்கிற நிலத்தைக் கணக்குப் பார்த்து கிடைக்கிற அளவுக்கு மக்களுக்குத் தாலாம், இதைப் பெரியார் இராமசாமி சொல்லுகிறார், என்ன கடலிலேயா அளந்து கொடுப்பீர்கள் என்று.

அவர் சொன்ன பிறகுதான் எனக்குத் தோன்றிற்று— அதைக் கூடச் சேர்த்திருக்கலாம் தேர்தல் அறிக்கையில். ஏனென்றால் கடல் என்றால் சாமான்யமென்று கருதாதீர்கள். மீனவர்களைப் போய் கேளுங்கள் — பழவேற்காட்டிற்குப் போங்கள், அல்லது வண்ணைப் பகுதிக்குப் பக்கத்திலே இருக்கிற மீனவ சமுதாய மக்களைக் கேளுங்கள், உனக்கு ரெண்டுரெண்டு ஏக்கர். ஐந்தைந்து ஏக்கர் கடலிலே அளந்துகொடுக்கிறார்களாம் என்று கேளுங்கள்.

கும்பிட்டுக் கூத்தாடி வாங்கிக் கொள்வார்கள். ஏனென்றால் நிலத்திலாகிலும் உழுது விதைத்து அறுக்கவேண்டும்.

கடல் இருக்கிறதே உழத் தேவையில்லை—விதைக்கத்தேவையில்லை. அறுவடை ஒவ்வொரு நாளும் கிடைக்கும். அளந்து கொடுக்கச் சொல்லுங்கள்.

ஒவ்வொரு மீனவர்களுக்கும் இத்தனை ஏக்கர் கடலில் அளந்து கொடுக்கப்படும் என்று

எனனமோ பெரியார் ராமசாமிக்கு என்னைப் பற்றியக் கணக்குத் தானே அவருக்கு ரொம்ப இருக்கிறது. ஆகையினால் மற்ற கணக்கை மறந்துவிட்டுக் கடலிலா கொடுக்கப் போகிறார்கள் என்று கேட்கிறார்.

கடல் சாமான்யமானதல்ல. கரையைவிட செல்வமுள்ளது தரையைவிட எளிதானது கரையிலே கிடைப்பதைவிட, தரையிலே கிடைப்பதைவிட கடலுக்கடியிலேகிடைக்கின்ற பொருள் ஒரு நாட்டு மக்களையே காப்பாற்றக் கூடியது.

ஆகையினால் கேலி பேசுவதாக எண்ணிக் கொண்டு கடலிலா கொடுக்கப்போகிறான் என்று சொல்வதில் பயனில்லை. இருக்கிற நிலத்தை அளந்து கொடு என்கிறோம்.

இது இந்த பதினான்கு வருடத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்கு ஏன் இந்த எண்ணம் தோன்றவில்லை. நான் சொன்ன பிறகுதான் ஏது நிலம் என்கிறார்கள்—ஏது அவ்வளவு நிலம் என்கிறார்கள்.

இருக்கிற அளவுக்கு நிலத்தை நீ பங்கிட்டுக் கொடுத்திருந்தால் நான் ஏன் அந்த பேச்சைப் பேசியிருக்கப்போகிறேன்.

நாலு பிள்ளைகளைப் பெற்ற தாய் இருக்கிற சாதத்தை சட்டியிலே போட்டு; சாதத்தைப் பிசைந்து பிள்ளைகளைக் கூப்பிட்டு ஆளுக்கு ஒவ்வொரு உருண்டை பிடித்துக் கொடுக்கிறாள். மிச்சம் இருந்தால் வழித்துத் தானும் ஒரு உருண்டை சாப்பிடுகிறாள்.

அதைப் போல ஆட்சியிலே இருக்கின்ற அளவுக்கு உருண்டை தரப்படும், புறம்போக்கு நிலம் இருக்கிற அளவுக்கு அது பிரித்துக் கொடுக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறோமே தவிர —நிலமில்லாதவர்களே வாருங்கள் எல்லோருக்கும் நிலம் என்று நாங்களா சொன்னோம். அது சத்தியமூர்த்தி ஐயர் சொன்னார், அவர்கள் காலத்தில் — நாங்கள் சொன்னால் மழை பெய்யும் — நானே கேட்டிருக்கிறேன் மாணவனாக இருந்த பொழுது—இந்த நடராசனெல்லாம் தான் அப்போது அவருக்குப் பக்கத்திலே இருந்து பஜனை பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆகையால் திராவிட முன்னேற்ற கழகம் ஆகாத திட்டத்தைச் சொல்லவில்லை —தேவையானத் திட்டத்தைச் சொல்கிறது. அதைப்பார்த்து எப்படிப்பட்ட வகையில் நாடு முன்னேற வேண்டுமென்ற கருத்துடையவர்கள், முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணி வீரர்களில் மிக முக்கியமானவரும், என்னுடைய அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவரும், ஏழை எளியவர்களுக்குத்தோழருமான என்.வி. நடராசன் அவர்களுக்குப் பேராதரவு தந்து வெற்றி பெறச்செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நன்றியறிதலோடு வணக்கத்தைச் செலுத்தி விடை பெற்றுச் செல்லுகிறேன்.

★

பெத்துநாயகன்பேட்டையிலே அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை "டேப் ரிகார்டர்" மூலம் பதிவு செய்து உதவிய பெத்துநாயகன் பேட்டை "மக்கள் மன்றத்தினருக்கு" நமது நன்றி உரித்தாகுக.

(நிர்வாகி)

அண்ணு பேச்சு தொடர்ச்சி

குடும்பச் சண்டைக்கு காரணம் யார்?

கலைகிறபோது இதைக் கொடுங்கள்' என்று சொல்லி வைத்திருந்தேன்.

என். வி. நடராசன் வெளியே வருகிற பொழுது, என். வி. நடராசன் காங்கிரசை விட்டு விலகினர். அவர் கடற்கரைக் கூட்டத்திலே பேசப்போகிருர் என்ற நோட்டீசை நமது நண்பர் கணேசன், நடராசனிடத்திலே கொடுக்க— இவர் வாங்கிப்பார்த்து நான் இப்போதுதானேவிலகினேன் இது முன்னுலே எப்படித் தெரியும்! என்று கேட்க,'இதை அந்த ஆருடக்காரர் அண்ணுதுரை முன்னுலேயே நோட்டீஸ் போட்டுவிட்டார்'என்று இவரிடத்தில் சொல்லி, இவரைக் கடற்கரைக்குஅழைத்துக்கொண்டு வந்து முதல் முதலில் நம்முடைய மேடையிலே ஏற்றிப் பேசவைத்தோம்.

அன்று முதல் இன்றுவரையில் எந்த அரசியல் சபலத்துக்கும் இடங்கொடுக்காமல்- என்னுடைய கருத்துக்களை நல்லபடி ஏற்று நாட்டிலே பரப்புகின்ற நண்பர்களில் மிக முக்கியமானவராகவும், மிக எளிய வாழ்க்கையில் உள்ளவராகவும் நம்முடைய நண்பர் நடராசன் நல்ல தொண்டாற்றிக் கொண்டு வருகிருர்கள்.

நீங்கள் தொண்டுக்கு மதிப்பளிக்க வேண்டுமாளுல் நடராசனுக்கு ஆதரவு தரவேண்டும்.

உண்மை ஊழியத்துக்கு மதிப்பளிக்க வேண்டுமானுல் நடராசனைப் போன்றவர்களை சட்டமன்றத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

அரசியல் சபலங்களுக்கு ஆட்படாமல் — அரசியல் லாபங்களைத் தேடிக்கொள்ளாமல் கொள்கையை இழந்துவிடாமல்—கோணல் வழியிலே நுழையாமல் எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் ஒரே நிலையிலே நின்று, ஒரே கொள்கைக்காக வாதாடியவர்கள் சட்டமன்றங்களுக்குச் செல்வதுதான் அரசியலிலே நாணயத்தை— அரசியலிலே நேர்மையை—அரசியலிலே தன்னலத்தை மறுக்கின்ற சுபாவத்தை —அரசியலிலே நல்ல தெளிவைத் தரும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களானுல் நம்முடைய நண்பர் நடராசன் அவர்களை சட்டமன்றத்துக்கு அனுப்பவேண்டும்.

இவரைப்பற்றி இதனை நான் சொன்னேன், இதே மாதிரியாக காங்கிரஸ் கட்சியை நீங்கள்— இந்த 25 ஆண்டுகளாக அல்லது 15 ஆண்டுகளாக இருக்கிற காங்கிரஸ் கட்சி எப்படி எப்படி மாறிக்கொண்டு வந்திருக்கிறது, எப்படி எப்படி உருமாறியிருக்கிறது—எப்படி கொள்கையிலிருந்து நழுவியிருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் என்னுடைய பேச்சைக்கூட கேட்க வேண்டாம்.

நீங்கள் ஒரு டீ கடைக்குப் போங்கள்.

டீ கடைக்குப் போனவுடன் முதல் முறையாக தேயிலை எடுத்து அதைப்போட்டு டீ கொடுப்பார்கள். சாப்பிட ருசியாக இருக்கும். இரண்டாவது கப் கேட்டால் அதிலேயே வெந்நீரை ஊற்றி, அதிலேயே டீ கொடுப்பார்கள் அதுவும் கொஞ்சம் சுவையாக இருக்கும். மூன்ருவது கப் அதிலேயே தயாரிப்பார்கள் — சுமாராக இருக்காது. நாலாவது கப் தயாரிப்பார்கள், பிடிக்காது. ஐந்தாவது கப்புக்குத் தண்ணீரை ஊற்றுகிறபோது, 'புது தேயிலை போட்டு நீ, தேநீர் தயாரித்துக்கொடு. இந்த பழைய குப்பையைக் கீழேபோடு' என்று நாமே சொல்லுவோம்.

இப்போது இருக்கிற காங்கிரஸ் ஐந்தாவது டீ என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

முதல் கப்புக்கு நல்ல கொதிக்கிற தண்ணீரைப் புதிய தேயிலையிலே ஊற்றி, காந்தியார் காலத்திலே முதல் கப் கொடுத்தார்கள் அது குடித்த உடன் சுறுசுறுப்பு ஏற்பட்டு வெள்ளைக்காரர்களை ஓட்டக்கூடிய வலிவுவந்தது.

இரண்டாவது கப் கொடுத்தார்கள் வெள்ளைக்காரன் போன இடத்திலே உட்காருகிற தெம்புவந்தது-

மூன்ருவது கப் கொடுத்தார்கள், முதல் ஐந்தாண்டுத் திட்டம் நடந்தது.

நாலாவது கப் கொடுத்தார்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்வந்தது.

இப்போது அதே தேயிலையில் அதே கொதிக்கிற நீரை ஊற்றிஞல், டீ வராது, சக்கையிலிருந்து கொஞ்சம் சாறுவரும். அந்தச் சாறுதான் இப்போது இருக்கிற காங்கிரஸ். ஐந்தாவது கப் டீயைக் குடிக்க உங்களுக்கு மனமிருந்தால் காங்கிரசுக்கு ஓட்டுப்போடுங்கள். 'இல்லை, கொடுக்கிற காசுக்கு நல்ல டீதான்' வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் முதல் கப்பாக இருக்கிற தி. மு. கழகத்துக்கு நீங்கள் வாக்களியுங்கள்.

விலைவாசி ஏறியது யாராலே வேதனை பெருகியது எவராலே?

அதைப்போலவே நீங்கள் எந்தெந்தச் சாமானை எப்படி எப்படி உபயோகப்படுத்த வேண்டுமென்பது நம்முடைய தாய்மார்களுக்கு தெரியும். குழம்புக்கு மட்டும்தான் மிளகாய்; அந்த மிளகாயைக் கண்ணுக்கு அருகில் கொண்டு போக மாட்டார்கள், வெங்காயத்தைக் குழம்புக்குத்தான் போடுவார்கள்—அதை கண்ணிலே படாமல் பார்த்துக்கொள்வார்கள். அதைப் போலத்தான் காந்தியார் சொன்னுர் காங்கிரஸைப்பற்றி இது வெள்ளைக்காரனை ஓட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு—சுயராஜ்யத்தை வாங்குவதற்காக இருந்த அமைப்பு அந்த வேலை அந்த அமைப்பினுலே முடிந்துவிட்ட பிறகு, அதை அப்படியே நீடிக்கச்செய்தால், அந்தக் கட்சிக்குள்ளே — கள்ளமார்க்கெட்காரன் நுழைவான்-கொள்ளை லாபக்காரன் கொட்டமடிப்பான்- சுயநலக்காரன் அதில் புகுந்துவிடுவான்.

அப்படிப் பட்டவர்கள் அந்தக் கட்சியிலே புகுந்துவிட்டால் பழையபலேபினை வைத்துக் கொண்டு, அவர்கள் ஊரை அடித்து உலையிலே போடுவார்கள். காங்கிரஸ் கட்சியைக் கலைத்து விடுங்கள் சுயராஜ்யம் கிடைத்து விட்டது, அதற்குத்தான் காங்கிரஸ் அது முடிந்த பிறகு காங்கிரஸ்கட்சி வேண்டாம் என்று காந்தியார் இறப்பதற்கு முன்னுலே தெளிவாக — பேசிவிட்டு மட்டும் அல்ல எழுதி விட்டும் போனுர்.

அதற்குப் பிறகும் அதைக்கலைக்காமல் அந்தக்கட்சியை வைத்துக் கொண்டு இருப்பதால்தான் அதிலே அனைவரும் நுழைகிருர்கள்.

சஞ்சீவி ரெட்டியார்— அகில இந்திய காங்கிரஸ் தலைவர், கண்டவர்கள் காங்கிரசில் நுழைந்ததால் காங்கிரசே கெட்டு விட்டது என்று அவரே சொல்லியிருககிருர்.

அப்படிப் பட்ட காங்கிரஸ் கட்சிதான் இன்றிருக்கிற கட்சி என்பதை தேர்தலுக்கு ஓட்டுச்சாவடிக்குப் போவதற்கு முன்னுலே ஒரு கணம் நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

காந்தியார் எதற்காகக் காங்கிரசைக் கலைக்கச் சொன்னுர்? இதற்கு இருக்கிற அரசியலைப் புரிந்து கொள்ள நீங்கள் அதிக தூரம் போகத் தேவையில்லை அதிகமான புத்தகங்களைப படிக்கத் தேவையில்லை. பொதுக் கூட்டங்களிலே கூட நீங்கள் கேட்கத்தேவையில்லை. வீட்டிற்குப் போய் உங்களுடைய தாயாரைக் கேளுங்கள் உங்களுடைய உடன் பிறந்தாரைக் கேளுங்கள், உங்களுடைய மனைவியைக் கேளுங்கள். இராத்திரி சமையல் வேலை ஆனவுடன் அடுப்பு நெருப்பை அணைத்து விட்டுத்தான் அவர்கள் படுக்கிருர்களே தவிர — இது மறுபடியும் நாளை காலையிலே காப்பி போடவேண்டும் என்று இரவிலே அடுப்பு நெருப்பை அணைக்காமல் வந்து படுக்க மாட்டார்கள், ரொம்ப அவசரத் தோடு கூட நீங்கள் கூப்பிடலாம், கல்யாணமான ஒரு வருஷம், இரண்டுமாக இருந்தால்- அப்பொழுது கூட மனைவி சொல்லுவாள்' இருங்கள், இருங்கள்' அடுப்புநெருப்பை அணைதுவிட்டு வருகிறேன் என்று தான் சொல்லுவார்கள்.

ஏனென்ருல் சமையலுக்காக மூட்டப்பட்ட அடுப்பை' அந்தக் காரியம் முடிந்தவுடன் அணைக்காவிட்டால் இரவெல்லாம்; அடுப்பு நெருப்பு எரிந்தால் கூரையிலே தீப் பிடித்துக் கொள்ளும்.

மறுபடியும் நெருப்பு தேவை என்ருல் காலையிலே அடுப்பு மூட்டிக் கொள்ளலாம். ஆனுல், சமையல் வேலை முடிந்ததும் ராத்திரி அடுப்பு நெருப்பை அணைத்துவிட்டு வந்து படுப்பதைப் போல், ஆங்கிலேயர்களை விரட்டியான பிறகு அடுப்பு நெருப்பை அணை என்று அண்ணல் காந்தியார் சொன்னுர்.

இல்லை, இல்லை, நாங்கள் எத்தனையோ கூரையைக் கொளுத்த வேண்டும் அது இன்னமும் இருக்கட்டும் என்று 14 வருடங்களாக காங்கிரஸ் கட்சி சொல்லி, இன்றைய தினம் ஊரே தீப் பிடித்து எரிகிறது.

"எங்கே எரிகிறது அண்ணு?" என்று நீங்கள் கேட்கலாம்.

இலைக்கு முன்னுலே உட்காருகிற பொழுதுதீப்பிடித்துத்தானே வயிறு எரிகிறது.

மனைவி சாதத்தை வடித்து அதிலே குழம்பை ஊற்றியவுடனே சந்தோஷமா வருகிறது கணவனுக்கு, ஒரு பிடி பிசைந்து வாயிலே வைக்கிறபோதே முகஞ்சுளித்து அவளைக் கேட்கிருன்.

"இது குழம்பா! நீதான் வைத்ததா ?"

"ஆமாம்! வைத்தால் என்ன— என்ன அதிலே குற்றம்!" என்று மனைவி கேட்க,

"இது குழம்பா, நீயே பார்" என்று கொஞ்சம் குழம்பை எடுத்து அவள் வாயிலே ஊற்றப்போக,

"இருங்கள், இருங்கள்" என்று மனைவி சொல்ல,

"இதைப்போய் குழப்பு என்று சொல்லுகிருயே, உப்பு சப்பில்லையே" என்று அவன் சொல்ல,

"இதை என்னைக் கேட்கிறீர்களே, போய் காங்கிரஸ்காரர்களை கேளுங்கள் எனக்கு என்ன தெரியும். மிளகாய் விலை என்ன? மிளகு விலை என்ன" என்று மனைவி சொல்ல,

எதிர்த்தா பேசுகிருய் என்று இவன் ஒரு தட்டுத்தட்ட, அதில் அவள் பயந்து கையிலே இருப்பதைக் கீழே போட, அது கீழே விழாமல் இவன் தலையிலே விழ.

ஆகா! இவ்வளவுக்கு ஆகி விட்டதாஎன்று இவன்கூச்சலிட, எதிர் வீட்டுக்காரன், பக்கத்து வீட்டுக்காரன், வந்து என்ன? என்ன? என்று கேட்க, குழம்பு சரியாயில்லையே என்று சொன்னேன். இந்த பஜாரி தலையிலே சட்டியைப் போட்டாள் என்று இவன் சொல்ல பககத்து வீட்டுக்காரன் இவனைப் பார்த்து.

என்ன இருந்தாலும் இதைச் செய்யலாமா என்று சொல்லி என்னுடைய மனைவி இப்படிச் செய்வதிலலை—வேறு மாதிரி என்று சொல்லிவிட்டுப் போக, இப்படி ஏழை எளியவர்களின் குடும்பங்களில் நடக்கிற சண்டைகளுக்கு யார் காரணம்?

பட்டிக்குள் ஆட்டைத்தேடும் பண்டிதர்!

காங்கிரஸ் காரணம்!

விலைவாசி ஏற்றங் காரணம்!

ஆகையினால்தான் அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பது நமக்கு நாமே கெடுதலைத் தேடிக் கொள்வதாகும்.

ஆகையினால் நான் முதலிலே சொன்னபடி, அது முன்னாலே இருந்த வீரதீர காங்கிரசு அல்ல, இப்பொழுது இருக்கிற காங்கிரஸ் விலைவாசிகளை ஏற்றிய காங்கிரஸ். கள்ளமார்க்கெட்டை வளர்த்திருக்கிற காங்கிரஸ். கொள்ளை லாபம் அடிக்கின்றவர்களிடத்திலே குலவிக் கொண்டிருக்கிற காங்கிரஸ்.

இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் யார் நின்றாலும் சரி, எவ்வளவு பெரியவர் நின்றாலும் சரி அத்தனை பேரும் முதலாளிமார்களுக்கு கைக்கூலிகளாகத்தான் அவர்கள் ஆக்கப்படுவார்களே தவிர சமதர்ம திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ப நல்லவர்களாக அவர்கள் பணியாற்ற முடியாது.

நம்முடைய நண்பர் நடராசன் அவர்கள் அதற்கு நேர்மாறாக, சமதர்ம திட்டத்தையே முன்னேற்றக் கழகத்திலே கூட அதிகமாகப் புகுத்துவதற்கு அரும்பாடுபட்டவர்கள். தொழிலாளர் இயக்கத்திலே நீண்ட பல ஆண்டுகளாக அரும்பணியாற்றிப் பழக்கப்பட்டவர்கள். ஏழை எளியோர்களின் துயரங்களை நேரடியாகப் பார்த்தவர்கள். ஏழை எளிய குடும்பத்

திட்டங்களில் விளைந்தசெல்வம் திரண்டிருப்பது யாரிடம்?

திலே பிறந்து இன்னமும் எளிய வாழ்க்கையிலேயே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள்.

அப்படிப்பட்டவர் சட்டமன்றத்துக்குச் சென்றால்தான் சமதர்மம் வெற்றி பெறும். இதைச் சொல்லுகிற நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் நாங்கள் ஐந்தாண்டுத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றியதால் எவ்வளவு செல்வம் வளர்ந்தது என்று ஒரு கணக்கை கொடுத்தார்கள். ஏராளமான செல்வம் வளர்ந்தது என்று நேருவிடத்திலேயே சொன்னார்கள்

பண்டித நேருவே திருப்பிக் கேட்டார், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் செல்வம் வளர்ந்தது உண்மை. ஆனால், வளர்ந்த செல்வம் எங்கே என்று நானல்ல-நடராசனல்ல, கல்யாணசுந்தரமல்ல — நேரு பண்டிதரே கேட்கிறார் இந்த விசித்திரத்தை உலகத்திலே பார்த்திருக்கிறீர்களா! இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் செல்வம் வளர்ந்திருக்கிறது. வளர்ந்த செல்வம் எங்கே? நேரு கேட்கிறார்' கேட்டது மட்டுமல்ல அதற்காக ஒரு கமிட்டி அமைத்து அதுஎங்கே தேடுங்கள் என்கிறார்.

ஆடு மேய்த்துக் கொண்டு போகிறவர்களுக்கு நான் சொல்வது புரியும். இரவுக்காலத்தில் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்து பட்டியில் அடைக்க வேண்டுமானால், எல்லா ஆடுகளும் வந்ததா என்று பார்த்து. நொண்டி ஆடு, மொண்டி ஆடு, குட்டி ஆடு இது அத்தனையும் வந்ததா என்று பார்த்து பிறகு அதைக் கொண்டு வந்து பட்டியிலே அடைப்பார்கள் பட்டியிலே அடைத்து விட்ட பிறகு ஐயோ! கறுப்பு ஆடுஎங்கே வெள்ளை ஆடு எங்கே? என்று கேட்க மாட்டார்கள், ஏனென்றால் பட்டிக்கு ஆடு வருகிற போது இந்த ஆடு மந்தையோடு வரா விட்டால் ஓநாய்க்குப் பலியாகி விட்டிருக்கும். நாய் நரி கடித்து இறந்து விட்டிருக்கும். ஆகையினால் பட்டிக்குள்ளே ஆடு வருவதற்கு முன்னாலேதான் ஆட்டினுடையகணக்கைப் பார்க்கவேண்டும்.

பண்டிதர் ஜவகர்லால் நேரு அவர்களோ, பட்டிக்குள்ளே இருந்துகொண்டு ஆட்டினுடைய கணக்கைக் கேட்கிறார்.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தபிறகு, ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்து பட்டியிலே அடைத்துவிட்ட பிறகு அந்த ஆடு எங்கே? இந்த ஆடு எங்கே? என்று கேட்பவர்களைப்போல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் விளைந்த செல்வம் எங்கே என்று கேட்கிறார். எங்கே இருக்கிறது செல்வம்? ஒன்றரை லட்சம் ரூபாய் விலையில் சென்னை நகரத்தில் மோட்டார் ஓடுகிறதே அங்கே இருக்கிறது.

ஒன்றரை லட்சம் ரூபாயிலே மோட்டார் என்றால் ஒன்றரை லட்சம் விலை என்று அர்த்தமல்ல, அதன் விலை நாற்பதாயிரம் என்றிருக்கும். ஆனால் அதை கள்ள மார்க்கெட்டிலேதான் வாங்க வேண்டுமென்றால் ஏராளமான பணம் சம்பாதிக்கின்றவர்கள் அதிக விலை கொடுத்து-கணக்கிலே வராத பணம் கொடுத்து ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு ஒரு மோட்டார் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். எனக்கு வேண்டிய ஒரு நண்பர் அப்படி ஒன்றரை லட்சம் ரூபாயிலே கார் ஒன்று வாங்கி வைத்துக்கொண்டு, அது ஓடுவதற்கு பாதையில்லையே என்று கஷ்டப் படுகிறார். அந்த மோட்டார் இந்த தெருவிலே கொண்டு வந்தால் தெரு கொள்ளாது. அவ்வளவு பெரிய படகு போன்ற மிக உயரமான, மிக அகலமான. மிகப் பளபளப்பான மோட்டார்.

கோயமுத்தூரிலே உள்ள மில் முதலாளிகள் ஒரு, பங்களா வாங்கி அதை ஒரு வருடத்திற்குப் பிறகு இடித்துவிட்டுப் புதிய மாடவிலே கட்டுகிறார்கள்.

ஒரு கோயமுத்தூர் மில்முதலாளியின் மனைவி, கோயமுத்தூரிலே இருந்து பிளைமவுத்காரிலே சென்னை வந்துகொண்டிருந்தார்கள், நடந்த கதை. இரண்டு வருடத்துக்கு முன்னாலே— பிளைமவுத்திலே வந்து கொண்டிருந்தபொழுது உளுந்தூர் பேட்டைக்குப் பக்கத்தில் எதிர்புறத்திலேயிருந்து இன்னொரு மில் முதலாளியின் மனைவி ஒரு பாண்டியாக்காரில் போனார்கள். இருவரும் சௌக்கியமா என்று கேட்பதற்காக நிறுத்தினார்கள்.

இந்தப் பாண்டியாக் காரிலே வந்த மில் முதலாளியின் மனைவி, பிளைமவுத் காரிலே வந்த மில் முதலாளியின் மனைவியைப் பார்த்து, 'என்ன, அதே பழைய பிளைமவுத் தானா' என்று ஒரே வார்த்தை கேட்டார். உடனே இந்த அம்மாவிற்கு வெட்கம் வந்துவிட்டது உடனே சொன்னார்கள். இல்லை! இல்லை! இதைக் கொண்டு போய் சென்னையிலே விற்றுவிட்டு, புதிய மோட்டார் வாங்கத்தான் போகிறேன் என்று சொல்லிவிட்டு, மூந்தானையை இழுத்துப் போர்த்துக் கொண்டு, டிரைவரைக் காலாலே சீட்டை உதைத்து விடு! விடு! என்றார்கள். பிளைமவுத் கார் சென்னைக்கு வந்தது. அதை ஒன்றுக்குப் பாதிவிலையாக விற்றுவிட்டு, எதிரிலே பார்த்தார்களே பாண்டியாக் மோட்டார், அதே மாடல் பாண்டியாக் மோட்டாரை அறுபத்தாறாயிரம் ரூபாய் விலை கொடுத்து வாங்கி இரண்டு நாளைக்கெல்லாம் அந்தப் புதிய பாண்டியாக்கில் கோயம்புத்தூர் போய்ச் சேர்ந்தார்கள்.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் விளைந்த செல்வம் எங்கே என்று நேரு கேட்கிறாரே. அங்கே தான் இருக்கிறது.

புதிது புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்கள்—மெருகு குலையாத மோட்டார்கார்கள் — ஒரு கல்யாணத்திலே இரண்டு லட்சம்,மூன்று லட்சம் செலவு—ஆறு கச்சேரி, ஏழு கச்சேரி, ஒரு காது குத்தும் திருவிழாவுக்கு ஐயாயிரம். ஆறுயிரம், இடிந்துபோன கோயில்களை எல்லாம் புதிதாகக் கட்டுகின்ற தர்மவான்கள்—அன்னதான சத்திரங்களிலே ஆயிரம் பேருக்குச் சோறு போடுகிறேன் என்று போஸ்டர் போட்டு இருநூறு பேருக்குச் சோறு போட்டுவிட்டு மிச்சம் வந்தவர்களை வாழை மட்டையாலே அடித்துத் துரத்துகின்ற தர்மவான்கள்.

இப்படிப்பட்டவர்களிடத்திலே— இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய செல்வம் இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் செல்வம் கிடைத்து இப்படிப்பட்டவர்களுக்குத்தான் அது போய்ச் சேரவேண்டுமென்றால் தாராளமாகக் காங்கிரசுக்குப் போடுங்கள்.

இல்லை, இல்லை திட்டத்தில் கிடைக்கும் பலன், குடிசை வீடுகளை ஓட்டுவில்லை வீடுகளாக்க வேண்டும்—ஓட்டுவில்லை வீடுகள் மாடி வீடுகளாக வேண்டும்— மார்புடைய பாடுபடுவோனுக்கு நிம்மதியான வாழ்க்கை வாங்கித் தரவேண்டும். புதிய புதிய தொழிற்சாலைகளும் — தொழிற்சாலைகளின் நீதியும் நிம்மதியும், விவசாயத்திலே நல்ல விளைச்சலும், விளைச்சல் அதிகமாக அதிகமாக விலைவாசிக் குறைவும், விலைவாசிக் குறைய குறைய வீடுகளிலே சந்தோஷமும், இப்படிப்பட்டவை தேவை என்றால் முன்னேற்றக் கழகத்தைத் தேடுங்கள். நல்லவர்கள் வேண்டுமென்றால் முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவு கொடுங்கள்.

இருக்கிற நிலைமை போதுமென்றால் காங்கிரசை ஆதரியுங்கள்.

நான் இரண்டையும் எடுத்துச் சொல்லுகிறேன். யாரையும் கண்ணைக்கட்டி காட்டுக்கு அழைத்துக் கொண்டு போகவில்லை. யாரையும் மிரட்டவில்லை — மயக்கவில்லை — ஆசைகாட்டி அவர்களை நயவஞ்சகத்தாலே ஓட்டு வாங்க எண்ணவில்லை.

காங்கிரஸ் மந்திரிகள்தான் சொல்லுகிறார்கள், அண்ணாத்துரை தேர்தல் அறிக்கையின் மூலமாக ஆசை காட்டுகிறான் என்று.

உலகத்திலே எந்த கட்சியாவது தேர்தல் அறிக்கை வெளியிடுகிற போது பயங்காட்டியா ஓட்டு கேட்கும்? எனக்கு ஓட்டு போடு. ஓட்டுப்போட்ட கையை ஒன்பது நாளிலே வெட்டிவிடுறேன், அது தான் என்னுடைய திட்டம், எனக்கு ஓட்டுப்போடு என்று கேட்பார்கள். ஒவ்வொரு கட்சியும், எங்கள் கட்சியை நீங்கள் தேர்ந்தெடுத்தால் உங்களுக்கு நாங்கள் இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்றுதான் சொல்லுவார்கள்.

ஒரு பெண்ணைப் போய் பார்க்கிறார்கள், கல்யாணத்துக்கு பத்துப் பவுனிலே செயின் போடுகிறோம் என்று சொல்லிப் பெண்ணைக் கேட்கிறார்கள். உடனே பக்கத்திலே ஒருவர் பார்த்து, நம்பாதே-நம்பாதே ஆசை காட்டுகிறார்கள். பத்து பவுனிலே செயின் போடுவதாகச் சொல்லுகிறான். அவனை நம்பிப் பெண் கொடுக்காதே— எங்கள் வீட்டுப் பையனுக்கு கொடு. இருக்கிற சங்கிலியை எட்டு நாட்களிலே விற்றுக்காட்டுகிறேன் என்று கேட்டா பெண் கேட்பார்கள்.

அதைப்போல ஒரு அரசியல் கட்சி திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு தேர்தல் அறிக்கை வெளியிட்டால் அதிலே இது சொத்தை. இது சோடை, இது உடைசல், இது வாசிய சரக்கு, இது உருப்படாதது, இது உபயோகமில்லாதது. இது ஆபத்தைக் கெடுக்கும் என்று சுட்டிக்காட்டுவார்களா, ஆசை காட்டுகிறான்—மயங்காதீர். இப்படியா ஒரு அரசியல் நடத்துவார்கள்.

மந்திரிகளுக்கு திடீர் திடீர் என்று சந்தேகம் வருகிறது. ஒரு மந்திரிக்கு நேற்று ஒரு சந்தேகம்வந்தது பத்திரிகையில் பார்தேன்.

அண்ணாதுரை வரியை எல்லாம் குறைக்கச் சொல்லுகிறான் அதே நேரத்தில் வசதி பெருக வேண்டுமென்கிறான். இது எப்படி முடியும் என்று. நான் ஜால வேடிக்கைக் காரனல்ல அல்லது அலாவுதீனைப் போல அற்புத தீபத்தைக் கையிலே வைத்துக்கொண்டில்லை. அதைத் துடைத்து பூதமே மலைமலையாக

கடலிலே நிலம் அளந்து கொடுக்கத் தயாரா?

அரிசியைக் கொடு என்று கேட்கச் சொல்லவில்லை.

நான் வரியைக் குறைக்கச் சொல்லி வசதியைப் பெருக்கச் சொல்கிறேன் என்ருல் — அந்த அமைச்சருக்குப் புரியாவிட்டால்— அதிலே சந்தேகம் ஏற்பட்டால், என்னை விளக்கம் கேட்பது அவரது தரத்திற்கு ஏற்றது தான் என்று கருதுவாரனுல் என்னைக் கூப்பிட்டு அவர் கேட்கவேண்டும். இது என்ன அண்ணுத்துரை விசித்திரமாக இருக்கிறது. வரியையும் குறைக்கச் சொல்கிருய். அதே நேரத்தில் வசதியையும் பெருகச் சொல்கிருய் இது எப்படி முடியும் என்று கேட்கட்டும்.

வரியைக் குறைக்கச் சொல்லி வசதியைப் பெருக்கச்சொல்கிறேன் என்ருல், வரி பெருகுவதால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்யத் தக்க வகையில் வருவாயைப் பெருக்கச் சொல்கிறேன். தொழில்களை நடத்தச்சொல்கிறேன்.

தனிப்பட்டவர்களிடத்திலே விட்டிருக்கின்ற தொழில்களை சர்க்கார் மேற்கொண்டு அதிலே கிடைக்கின்ற வருவாயை வைத்துக்கொண்டால், வரியைக் குறைக்கலாம்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன் —யாரையும் மனதிலே வைத்துக்கொண்டு பேசவில்லை.

மவுண்ட் ரோடில் சினிமா கொட்டகை இருக்கிறது என்று வைத்

கள்—வெளியிடங்களிலே - இந்த ஊரிலே அல்ல—வெளியூர்களிலே பேசிக்சொள்கிருர்கள்.

அட்டடி இருக்கிறபோது சென்னை நகரத்தில் ஒரு இருபது இருபத்தைந்து சினிமாக் கொட்டகைகளை ஒரு கோடி ரூபாய் செலவில் சர்க்கார் கட்டி இருந்தால், எவ்வளவு வருவாய் கிடைக்கும். அதிலே கிடைக்கின்ற வருவாயை வைத்துக்கொண்டால் வரியை ஏன் குறைக்க முடியாது. முட்டை வேண்டும் வேண்டுமென்கிருர்களே அது எப்படி கிடைக்கும் என்று நீ சேவலையே பார்த்துக் கொண்டிருந்தால்பெட்டைக்கோழி முட்டையிடும், தேடு, அதை விட்டு அண்ணுத்துரை முட்டை வேண்டும் என்கிருன் ஆனுல் சேவலைக் காட்டுகிருன் என்ருல் நான் சேவலையாக் காட்டுகிறேன். பெட்டைக்கோழி முட்டையிடும். ஆனுல் பெட்டைக்கோழி முட்டையிடவும் சேவலுடைய துணையும் வேண்டும்.

ஆகையினுல் எப்படி வருவாயைபெருக்குவது என்பதை சட்டசபையில் தீர்மானம் கொடுத்தோமே, நாட்டிலுள்ள பஸ் தொழிலை எல்லாம் சர்க்கார் உடைமையாக்கினுல் இத்தனை கோடி ரூபாய் லாபம் வரும், சென்னை நகரத்திலே மட்டும் நீங்கள் பஸ் தொழிலைச் சர்க்கார் வசமாக்கினுல் இத்தனை இலட்சம் உங்களுக்கு லாபம் வருகிறது. தமிழகம் பூரா

கக் கட்சி என்று, இப்படிப்பட்டவர்களை நான் கொடுத்திருக்கிற தீர்மானத்தைக் காட்டி காட்டி வலையிலே கொண்டுவந்து வைத்துக்கொண்டு பணத்தைச் செலவழிக்கச் சொல்லி, ஏழை மக்களை விலைக்கு வாங்கலாம் என்று கருதுகிருர்கள், அது முடிகிறதா இல்லையா, பிப்ரவரியில் பார்த்துக் கொள்வோம்.

நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்வது வரியைக் குறைத்தால் வசதி பெருகுமா என்ருல் வரியைக் குறைத்து வருமானத்தைப் பெருக்க தொழில்களைச் சர்க்கார் மேற்கொண்டால்வரியைக்குறைக்கலாம் வசதிகளையும் பெருக்கலாம்,

உதாரணத்துக்கு நான் சிலதினங்களுக்கு முன்னுலே ஆமதாபாத்துக்குப் போயிருந்தேன். ஆமதாபாத் கார்ப்பரேஷனில் நூற்றுஐம்பத்தி மூன்று ரூட்டுகளில் கார்ப்பரேஷனே பஸ் ஓட்டுகிறது. கார்ப்பரேஷனே பஸ் நடத்துவதாலே கிடைக்கிற வருவாயில் அவர்கள் மிச்சப் படுத்திவைத்திருக்கிற தொகை மட்டும் எட்டு கோடி ரூபாய் இருக்கிறது எட்டு கோடி ரூபாய் இருப்பதாலே ஆமதாபாத்தைமேலும் அபிவிருத்திசெய்ய முடிகிறது, அலங்கார மிக்க தாக்க முடிகிறது. அதைப்போல நாட்டிலே இருக்கிற ஆலைகளை நாட்டிலே இருக்கிற சினிமாகொட்டகைகளை, நாட்டிலே உள்ள தோட்டங்களை — நாட்டுத் தோட்

பிடிக்கிற அந்த பத்தாயிரம் ரூபாய் நெல்லைப் பாங்கியில் காட்டினுல் அதன்மேல் எட்டாயிரம் ரூபாய் கடன் தருகிருர்கள். இந்த எட்டாயிரம் ரூபாய் கடனைக் கொண்டுபோய், எட்டாயிரம் ரூபாய் நெல் வாங்கி இன்னெரு பாங்கியில் அதை அடகு வைத்தால் ஆருயிரம் கடன் கொடுப்பார்கள். அந்த ஆருயிரம் ரூபாய் இன்னெரு பாங்கியில் ஈடு வைத்தால் நாலாயிரம் ரூபாய் கடன் கொடுப்பார்கள் அந்த நாலாயிரம் ரூபாய் நெல்லை ஒரு பாங்கியிலே ஈடு காட்டினுல் இரண்டாயிரம் கொடுப்பார்கள். இந்த இரண்டாயிரம் ரூபாய் நெல்லை இன்னெரு பாங்கியிலே ஈடு காட்டினுல் ஆயிரம் ரூபாய் கொடுப்பார்கள். கூட்டிப் பாருங்கள். பத்தாயிரம் ரூபாய் முதலில் எத்தனை ஆயிரம் ரூபாய்க்கு ஒரு வியாபாரியாலே நெல்லைப் பிடிக்க முடிகிறது என்று,

இவ்வளவு நெல்லையும் ஒரு கொட்டடியிலே போட்டு பூட்டி வைக்கிருன். தெருவிலே உட்கார்ந்துக் கொண்டு அவனும் நம்மோடு சேர்ந்துகொண்டு "நல்ல நெல்லே கிடைக்கலீங்க...... நல்ல அரிசியே கிடைக்கலீங்க"—உள்ளே இருக்கிறது — பூட்டி வைத்திருக்கிருன் இத்தனைக்கும். அது அத்தனைக்கும் பணம் கொடுத்து வாங்கினுனு என்ருல் இல்லை, அவன் போட்ட முதல் ஆயிரம் ரூபாய். அவனிடத்திலே உள்ள நெல்லின் மதிப்பு ஏறக்குறைய முப்பதாயிரம்.

சினிமாக்களையும், பேங்குகளையும் நாட்டு உடமையாக்காதது ஏன்?

துக் கொள்ளுங்கள். மவுண்ட் ரோடிலே கட்டப்பட்டிருக்கும் சினிமா கொட்டகைக்கு ஐந்து லட்சத்திலிருந்து 10 லட்சம் வரை செலவாகலாம். கட்டடம் கட்ட. அது கட்டி முடித்தவுடன் அதிலே ஒரு படக் கம்பெனிக்காரன் படத்தை ஓட்டுவது என்ருல் வாரத்துக்கு பதினைந்தாயிரம ரூபாய். அவனே கொடுக்கிருன், எனக்கு இடம் கொடு என்று.

எனக்குத் தெரிந்த ஒரு சினிமாக் கட்டடக்காரர் அவர் செலவழித்த பணத்தை ஒரே வருடத்தில் பாதி அளவுக்கு ஈடு செய்துவிட்டார். அவ்வளவு வருவாய் வருகிறது சினிமா கொட்டகைக்கு ஏனிந்த கொட்டகைகளெல்லாம் தனிப்பட்ட முதலாளிகளிடம் இருக்க வேண்டும்.

இதிலே ஏன் சர்க்கார் மேற்பார்வை எடுத்துக் கொள்ளக் கூடாது. படம் எடுக்கவேண்டாம் நீங்கள் ரொம்பக் கஷ்டப்படுவீர்கள். விவரம் தெரியாது உங்களுக்கு—அது வரக்கூடிய நேரத்தில் மற்றவர்கள் பார்த்துக்கொள்ளட்டும். கொட்டகையிலே என்ன தகராறு.

கொட்டகை வாடகைக்கு கிடைக்குமா! கிடைக்குமா என்று படம் எடுத்தவரெல்லாம் தவியாய்த் தவிக்கிருர்கள். மேனேஜர்களுக்கு லஞ்சம் கொடுத்துத்தான் படம் ஓட்டவேண்டுமென்று சில இடங்

விலும் இருக்கிற பஸ் தொழிலை சர்க்கார் ஏற்று நடத்தினுல் இத்தனை கோடி ரூபாய் லாபம் வரும் என்று தீர்மானம் கொடுத்தோமே தோற்கடித்தீர்களே நீங்கள்— தோற்கடித்தது மட்டுமல்ல—பஸ் முதலாளிகளையெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் ஒரு மண்டபத்திலே கூட்டி வைத்து 'பெரிய ஆபத்து' உங்களுக்கு வரப்போகிறது. இந்த அண்ணுத்துரை சொல்கிருன், உங்களை எல்லாம் ஒழித்துவிடவேண்டுமென்று. ஆகையினுல் நீங்கள் எல்லாம் சேர்ந்து அவனை ஒழித்து விடுங்கள்.

அதற்குத்தானே என்னை எதிர்த்து ஒரு பஸ் முதலாளி. திருவண்ணுமலை சண்முகத்தை எதிர்த்து ஒரு பஸ் முதலாளி. கோவிந்தசாமியை எதிர்த்து ஒரு பஸ் முதலாளி. கோயமுத்தூரிலே ராசமாணிக்கத்தை எதிர்த்து ஒரு பஸ் முதலாளி—கணக்குப் பாருங்கள். முப்பது முப்பத்தைந்து பஸ் முதலாளிகள் இன்றையத் தினம் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களாக நிற்கிருர்கள். எந்தக் காலத்திலாவது கேள்விப்பட்டீர்களா! பஸ் முதலாளிகளுக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்?

அவர்களே சொல்லுகிருர்கள்; நீங்கள் எந்தக் கட்சி என்று கேட்கிருர்கள் பஸ் முதலாளிகளை. அவர்கள் சொல்கிருர்கள் கட்சியாவது இழவாவது. நான் அரசாங்

டங்கள் என்ருல் தேயிலைத் தோட்டங்கள் — ரப்பர் தோட்டங்கள்— காப்பித் தோட்டங்கள் — மிளகு பயிராகின்ற தோட்டங்கள் — இப்படிப்பட்ட தோட்டங்களையெல்லாம் சர்க்கார் உடமையாக்கினுல் அதிலே கிடைக்கக் கூடிய வருவாய் மக்களுக்கு வரிகுறைக்கவும், வசதி அதிகப்படுத்தவும் அது பயன்படும். எண்ணிப் பாருங்கள்!

பாங்குகளை தேசிய உடமையாக்க வேண்டும் என்று தி.மு.க. சொல்லுகிறது, ஏன் சொல்லுகிறது. எந்தப்பாங்கியிடத்தில் எங்களுக்கு கோபம்? எனக்குப் பாங்கிக்குப் போயே பழக்கமில்லை. ஆகையால் — எனக்கு கோபமில்லை —ஆசையுமில்லை— பகையுமில்லை. ஆனுல் என்ன செய்கிருர்கள் பேங்குகளில்.

உதாரணத்துக்கு சொல்கிறேன், நம்முடைய நண்பர் நடராசன் இந்தப் பாழாய்ப்போன அரசியல் வேண்டாம் என்று கருதி நெல்லு மண்டி வைக்கலாம் என்று ஒரு பத்தாயிரம் ரூபாய் முதல் போட்டு நெல் பிடிக்கிருர் என்று வைத்துக் கொள்ளுங்கள். மார்க்கெட்டிலே சரக்கு வாங்குகிருர் என்று சொல்வதில்லை. நெல் பிடிக்கிருர்கள் என்றுதான் சொல்கிருர்கள். ஏன் என்ருல் வேட்டைதான் வியாபாரம் ஆகையினுல் ஆடு பிடிப்பது போல் மாடு பிடிப்பதுபோல் மான் பிடிப்பது போல், நெல் பிடிக்கிருர்கள்.

இப்படி வியாபாரிகள் பொருளை வாங்கி அடைத்து வைத்து விலையை ஏற்றி ஏழை மக்களை அல்லல் படுத்துவதற்குப் பாங்குகள் பயன்படுவதினுல்தான் அந்த பாங்குகள் தனிப்பட்டவர்களிடத்திலே கூடாது என்ருல் அது யாரைக் குத்துப்—யாரைக் குடையுப். எதற்காக காங்கிரஸ்காரர்களுக்கு ஐயோ! பாங்குகளை உடமையாக்கச் சொல்கிருர்களே... என்ன...... அதனுல் நஷ்டம்.

ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு நஷ்டம், ராமநாதபுரம் ராஜாவுக்கு நஷ்டம். உனக்கென்னப்பா ராமதாசுக்கு மற்றவர்களுக்கு. நீயும் நம்மைப் போல. நான் கழகத்திலே அன்னக்காவடி என்ருல் நீ காங்கிரசிலே அந்த இலட்சணத்திலே இருக்கக் கூடியவர்கள்.

ஏழை எளிய மக்களின் சுக துக்கத்தை அறிந்தவர்தான் நம்முடைய நண்பர் ராமதாஸ் அவர்கள் இப்படிப்பட்டவர்களாவது நாங்கள் சொல்வது நியாயந்தான் என்று காங்கிரசிலே வாதாட வேண்டாமா?

'சூளைக்கல்லும் பிடாரி' என்பதைப்போல் இவர்களும் சேர்ந்து கொண்டு ஆமாம் அதெல்லாம் பேங்குகளைத் தொடக் கூடாது என்கிருர்கள் என்னமோ நம்

(4-ம் பக்கம் பார்க்க)

ஜனவரி 1-ம் தேதி வெளிவரும்!

அண்ணாவின் அழகுமிகு கவிதை நடையிலே தன்மானத் திராவிடரின் விடுதலையே விரும்பும் பொன்னான எழுத்தோவியம்!

"திராவிடம் நம்மிடம்!"

படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் இச்சிறு வெளியீட்டை வாங்கிப் படியுங்கள்.

ஆசிரியர்: த. அன்புவாணன் L C E.

வெளியிடுபவர்:

டி. துரைக்கண்ணு M. C. சென்னை-5

2-ம் பக்கத் தொடர்ச்சி...........

கின்ருய். நீ இங்குவந்து பார்த்தால் அலுவலகத்திற்குப் பெண்களையே அனுமதிக்கக்கூடாது என்ற நிச்சயமாய்ச் சட்டம் போட்டுவிடுவாய். அலுவலகத்து வேலை செய்யும் பெண்களுக்குக் கல்லூரிதான் வாழ்க்கைப் பயிற்சிச்சாலை! அவர்கள் அங்கே கற்ற பாடங்களுக்கு ஏற்றாற்போல் இங்கே நிற்கிருர்கள். வள்ளுவர் வழிவந்தவர்கள் அல்லவா? பாவம் அவர்கள் மட்டும் என்ன செய்ய முடியும்? அலுவலகத்துப் பெண்களை அம்பலத்துப் பெண்கள் என்று ஆண்கள் நாடுகிருர்கள். ஆனல் இந்த நிலை என்றும் நிற்காது என்று எண்ணுகிறேன். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்கள்தொகை அதிகமாக ஆகப் பொருளாதாரம் குறுக்கிடும் ஆண்கள்--பண்புள்ள குடும்பத்தினர் அலுவலகத்தில் 'மனைவி' உறவையே தேடுவர். இன்றுள்ள நிலைபோல் அம்பலத்தாடும் தெய்வங்கள் எதிர்காலத்தில் நடனமாடும் காட்சிகள் தோன்ருது.

ஆண்களோடு பெண்கள் நெருங்கிப் பழகும் பழக்கம் பொல்லாததுதான். பெண்கள் முக அழகும் ஆண்கள் மார்பு அழகும் பொல்லாததுதான் — நெஞ்சை மயக்கி அவ்வழகு ஒருவரை ஒருவர் கவர்வதும் பொல்லாததுதான். இரண்டு வேறுபட்ட ஆக்க உருவங்களிலே அமைந்திருக்கும் அடங்காத உணர்ச்சி வேகமும் கூடாததுதான். ஆனல் இவையெல்லாம் இருந்து போகட்டும். இறுதியாக இரண்டு சாராரை வாட்டும் ஒரு உடலின் உணர்ச்சிக்கும், மற்றொரு உடலின் உணர்ச்சிக்கும் வேறுபட்ட சுவையினை அறிந்து அதனைத் துய்த்து உணரும் அந்தச் சுவையுணர்வு கூடவே கூடாது என்றுதான் சொல்வேன். அழகான பெண்ணோடு மயங்கிக் களித்திருந்தவன் மறுநாள் ஒட்டிப்போன கன்னத்தோடு உறவாடத் துடிக்கின்ருனே! சுவை அறிந்து உண்பதிலே தவறு என்ன என்று கேட்கலாம். அதுவே வாழ்வென்று நாயைப்போல், பூனையைப்போல் வாழ்வு அமைத்துக் கொள்பவர்களுக்குத் தவறு இல்லைதான். ஆனல் அதைவிட உயர்ந்த நோக்கம் கொண்டவர்களுக்கு அது குற்றம்தானே; அது மட்டுமல்ல வேண்டாததும் அன்ருே!

குற்றம்! அனுபவிக்கும்போது புரியாது. அனுபவித்தபின் நெஞ்சில் படும்; உடலில் தோன்றும் தீமைகளின் வடிவு இறுதியில்தான். இவ்வாறு குற்றத்தை உண்டாக்கும் இந்தச் சுவை உணர்வை அச்சத்தாலும் அறிவாலும், அறவுரையாலும் சட்டத்தாலும்தான் அடக்கமுடியும். மேலும் சமுதாயத்தில் அவர்களை இகழும் மனப்பான்மை வந்துவிட்டால் இந்தச் சுவையுணர்வு மானத்தைக் காப்பாற்ற மறைந்துவிடும். நான் சொல்லும் அறிவுரைகள் பெண்களுக்கு மட்டுமல்ல. ஆண்களுக்குக் கூடத்தான்.

அத்தான்! அஜந்தாக் கொண்டையிட்டு ஆர்ட்டின் பொட்டிட்டு அஞ்சன இமை நீட்டி அணிவளைகள் குலுங்க, ஆடை வண்ண வண்ணமாய் உடுத்து உங்கள் கண்முன்னர். வீடு தேடி வந்து அழகால்—கவர்ச்சியால் மயக்குகிறேனே அது கூட தவறு என்று கேட்பாய். அழகாய் இருப்பது தவறு என்று நான் சொல்லமுடியுமா? நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அழகு வேண்டும் என்கிருர்களே! உள்ள அழகு. உடல் அழகு நோக்கித்தானே நம் பண்பாடும் நாகரிகமும் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அதில் அறம் கலந்திருக்கவேண்டும். இதுதானே முடிவு

அதோ என் எதிரே தோன்றும் தென்னை மரத்தின் கீற்றுகளினிடையேநிலாநின்றுசிரித்துக்கொண்டிருக்கின்றது. அந்த இருவர் எவ்வளவு நெருக்கமாக நின்று உறவாடுகின்றனர். அந்த அழகில் என் உள்ளம் இணைந்து அமைதியில் தழுவுகிறது இந்தக் கடிதத்தை இதோடு கீழே வைக்கிறேன். மற்றவை பின்பு.

அன்பன் தேனருவி

(தொடரும்)

மாணவர் மன்றம்

"மணிமேகலை விரிவுரை"

சென்னை மாணவர் மன்றச் சார்பில் மணிமேகலை இலக்கியச் சொற்பொழிவு 24—12—61 ஞாயிறு அன்று மன்ற நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு உயர்திரு பி. சாந்தலிங்கம், பி.ஏ., பி. எல். அவர்கள் தலைமை வகித்தார்கள். பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். கேள்விச் செல்வத்தினல் மக்களுக்குக் கிடைக்கும் பெரும் பயனையும் சங்க இலக்கிய நூற்களில் காணப்பெறும் விழுமிய கருத்துக்களையும், சொல்லாட்சி ஓசை நயத்தினையும் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் தம் வரவேற்புரையில் குறிப்பிட்டுச் சொற்பெருக்காற்றினர்கள்.

தலைமை உரையாற்றிய திரு. சாந்தலிங்கம் பி.ஏ.,பி.எல். அவர்கள் தமிழார்வம் குறைந்திருந்த அந்த நாட்களில் இத்தகு இலக்கியச் சொற்பொழிவுகளாற்றித் தமிழின் பெருமையினை உணர்த்திய பேராசிரியர் மணி, திருநாவுக்கரசர் போன்ற அறிஞர்களை நினைவுகூர்ந்து பாராட்டு தெரிவித்துக் கொண்டார். மாணவர் மன்றம் மக்களிடையே தமிழார்வம் ஊட்டி வரும் மறுமலர்ச்சி இயக்கம் என்று தலைவர் அவர்கள் பாராட்டுரை மொழிந்தார்கள்.

உயர்திரு. புலவர் கோ. வில்வபதி அவர்கள் மணிமேகலை இலக்கியத்தின் முதலிரண்டு காண்டங்களை விளக்கி விரிவுரை ஆற்றினர். ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையாக எழுந்த அமைதிக் காவியமாகத் திகழும் மணிமேகலை ஆற்றொழுக்கு நடையுடன் மிளிரும் சிறந்த இலக்கியமாகத் திகழ்வதைப் புலவர் வில்வபதி அவர்கள் சான்றுடன் விளக்கினர். கூட்டத்தில் பெருவாரியான ஆசிரியர்களும், புலவர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

உயர்திரு புலவர் தணிகை உலகநாதர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

தேர்தலும்-தேறுதலும்!

—(0)—

வருக! வருக! வணக்கம் ஐயா!
வரவே காணேன் இத்துணை நாளாய்;
என்ன காரணம்? எப்படி நலமே!

....

ஒகோ! நீரும் சட்டசபை செல்லத்
தேர்தலுக்கு நிற்கின் நீரோ!
நல்லது! நல்லது! நலமே பெறுக!

....

ஆளுங்கட்சி அபேட்சகர் நீரோ
அப்படி யானல் வெற்றி உறுதி!
பணம்தான் சிறிது செலவே யாகும்;
பரவா யில்லை. பதவி வேண்டுமே!

....

தி.மு. கழகம் எதிர்ப்பா
உமக்கு,
திணறுதல் வேண்டாம்;
இறைத்திடு பணத்தை.
வெற்றி உறுதி, விசனம்
வேண்டாம்!
கற்றவர் எதிர்ப்பார் கவலையேன்
உமக்கு?

....

எத்தனை வகுப்பு படித்தாய்
என்ரு
பித்தனைப் போலே கேட்டார்
உன்னை;
அதற்கா கவலை, அட!போம்
ஐயா!
'நம்முடை தலைவர் படித்தது
என்ன?
நாட்டையே நன்கு ஆளுதல்
பாரீர்!
என்றே கூறி மடக்கிடு
அவரை

....

'நீரென்ன, மாடா!' என்ரு
கேட்டார்!
பிறகென்ன நீருஞ் சூரியன்
கட்சியா!

மாடே சிறந்த சின்னம் ஐயா!
நாடே ஆளும் நம்முடை மாடு!

....

தொப்பி எங்கே, தொலைத்து விட்டீரோ!
தொப்பையைச் சிறிது குறைத்திடப் பாரும்!

....

பரவா யில்லை; கதருடை எங்கே?
பரணையின் மேலே தேடிப் பாரும்.
அழுக்கா யிருப்பினும் அதனல் என்ன,
புதிதாய் எதற்கு வீணே தைப்பது!
எடும்!எடும் அதனை தோய்த்துப் போடும்.
எதற்கும் காந்தி படமொன்று வாங்கி
வீட்டின் முகப்பில் மாட்டி வையும்.

....

கூட்டத்தில் பேசவா, கூச்சம் உனக்கு?
நாட்டினர் அதைத்தான் நாடுவர் உன்பால்
எழுதித் தருவேன், அதனையே படியும்
நடுக்கம் வேண்டாம்—நாலுரை போதும்.

....

'ஏனய்யா உனக்கு இந்தத் தொல்லை!'
என்ரு உமது தொண்டர் கேட்டார்!
மேலும் கூலி அவர்க்கே கொடுத்தால்
மறப்பா ரதனை மதிப்பா ரும்மை.
உம்உம்! பணத்தை வாரியே இறையும்!
உறுதி வெற்றி! உமக்கே உறுதி!
வருக! வருக! சென்றுநீர் வருக!

....

காரமா! லட்டா! வணக்கம் என்று
கூறிடப் பழகு; மறத்தல் வேண்டாம்!

கவிஞர். முத்தெழிலன்

தி

ரா

பொங்கற் புதுநாளன்று திராவிடன் கொட்டும் முத்தமிழ் முரசம்!

தித்திக்கும் தமிழிலே முத்துமுத்தாய் எண்ணம்தாங்கி வெளிவரும்

திராவிடன் பொங்கல் மலர் (1962)

ட

ன்

கடந்த 15 ஆண்டுகளாக் தென்புல மக்களுக்குத் தெவிட்டாத தெள்ளமுதென பொங்கல் மலர்களைப் படைத்த திராவிடன்……
சென்ற ஆண்டு எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் அழகும் அறிவும் மணக்க பொங்கல் மலரை அளித்த திராவிடன்……
இவ்வாண்டும் மிகச் சிறந்த முறையில் பொங்கல் மலரை தாயக மக்களுக்கு அளித்திட இருக்கிறது.

அறிஞர் அண்ணா

நாவலர் நெடுஞ்செழியன்
பேராசிரியர் மயிலைசிவமுத்து
பன்மொழிப்புலவர் அப்பாதுரையார்
சி. பி. சிற்றரசு
கி. மனோகரன்
இரதாபணுளன்
பேராசிரியர் க. அறிவழகன்
ப. உ. சண்முகம்
ஏ. பி. ஜனார்த்தனம்
எஸ். எஸ். தென்னரசு
மு. சண்முகம்
கலைஞர் கௌதமன்
தோட்பூர் திருவேங்கடம்

டாக்டர் மு. வரதராசனார்
டாக்டர் அ. சிதம்பரனார்
பேராசிரியர் அன்பழகன்
பேராசிரியர் அன்புகணபதி
டாக்டர் சத்தியவாணிமுத்து
டி. கே. சீனிவாசன்
காஞ்சி கலியாணசுந்தரம்
பேராசிரியர் மா. இளஞ்செழியன்
க. இராசாராம்
அரங்கண்ணல்
இரா. இளஞ்சேரன்
ச. வெ. பாண்டியன்
மாண்மகிழன்

கலைஞர் கருணாநிதி
கே. எ. மதியழகன்
எ. கோவிந்தசாமி
மா. தங்கவேலர்
தில்லை மறைமுதல்வன்
பேராசிரியர் மா. கி. தசரதன்
ப. வாணன்
இளமுருகு பொற்செல்வி
தூத்துக்குடி ஜோசப்
அருப்பைக்கிழார்
ஆ. மாதவன்
சேலம் சேரலாதன்
கலைச்செழியன்

அரியலூர் நெடுமாறன் ஆகியோரின் கருத்தோவியங்கள்

கவிஞர் வாணிதாசன், பொன்னிவளவன், மயிலை-முத்தெழிலன், ரவி, தமிழோவியன் வேழவேந்தன், தூத்துக்குடி புகழேந்தி, தி. வே. திருமாறன் ஆகியோர் அளித்திடும் கன்னல்நிகர் கவிதைத் தொடர்!

தூத்துக்குடி எம். எஸ். சிவசாமி, காட்டூர் கோபால் ஆகியோர் அளித்திடும் தொழிலாளர்களின் முன்னேற்றம் குறித்த கருத்தோவியங்கள்.

முன்னாள் மேயர் எம். எஸ். அப்துல்காதர் "நகராட்சியில் நாம்" என்பது குறித்துத் தீட்டும் அரிய கட்டுரை.

ஆந்திர மாநில தி. மு. க. அமைப்பாளர் வே. நரசிம்மன், எர்ரய்யா, கேரள மாநில அமைப்பாளர் சில்வர்ஸ்டர், சுபேர், கர்நாடக மாநில அமைப்பாளர் திராவிடமணி, வேணுகோபால் ஆகியோர் கழக வளர்ச்சி குறிந்து, அளித்திடும் சிறப்புக் கட்டுரைகள்.

ஆசிரியர் என். வி. என். நினைவூட்டும் இயக்கத்தின் அந்த நாள் வரலாறுகள் பற்றிய சிறப்புக் கட்டுரைகள்

மாணவர் கழகத்தின் மாண்புறு பணிகள் குறித்து, என். வி. என். சோமு தீட்டும் கட்டுரை ஆகியவையும் இன்னும் பல சிறப்பு அம்சங்களும் இடம்பெறும்.

மலரின் முகப்பு மூவண்ணம் - பாலு சகோதரர் கைவண்ணம்

அதிக பக்கங்கள் : : விலை. ரூ. 1-50.

மலர் தேவைப்படும் சந்தாதாரர்கள் தனியே ரூ. 1—50 அனுப்பி பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

நிர்வாகி :
திராவிடன்
சென்னை-1

விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவையான மலர்களுக்கு உரிய முன்பணத்தோடு உடன் தெரிவிக்கவேண்டுகிறோம்.

ஆசிரியர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், அச்சிடுபவர், சோமு அச்சகம், 168, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1